Regd. No. M. 4593

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 4-5-1946 சித்திரை 21உ } மலர் 30

## மாணவர் சுற்றுப்பிரயாணம்

### தஞ்சை மாவட்டம்

புலவர் ஆறுமுகம், புலவர் குழந்தையா, ஈரோடு சுப்பையன், தில்லை வில்லாளன் காஞ்சி வெங்கட்ராமன் ஆகியோர்.

5-5-46 சாக்கோட்டை
6— திருநாகேச்சுரம்
7— செம்பனார்கோவில்
8— குற்றாலம்
9, 10- மாயவரம் வட்டம்
11— போளம்
12— சன்னாநல்லூர்
13— கங்களாஞ்சேரி

மற்றவை பின்னர். கூட்டங்கள் நடத்த விரும்புகின்றவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவேண்டுகிறேன்.

வி எஸ். பி. யாகூப்,
விசயபுரம் போஸ்டு, திருவாரூர்.

☆

### சென்னை—செங்கற்பட்டு

தோழர்கள் மு. துரைராசு, கி. தியாகராசன், இ. சு. கனகபாண்டியன், இரா. இராமானுசம், எஸ். அப்பாவு ஆகியோர்.

5-5-46 தியாகராய நகர்
6— கான்ரான்ஸ்மித் நகர் மைதானம் சூளை
7— மைலாப்பூர் கடற்கரை & தண்டையார்பேட்டை (2 கூட்டங்கள்)
8— புரசைவாக்கம் கிராமத் தெரு & வண்ணை செயராம் நாடார் மைதானம் (2 கூட்டங்கள்)
9— பெரம்பூர் இரயில்வே ஸ்டேஷனுக்கெதிர் மைதானம்
10— பீபில்ஸ் பார்க் மைதானம்

முழு விவரங்கள் அவ்வப்போது அறிவிக்கப்படும். கூட்டம் அமைக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

என். வி. நடராசன்,
18, பெருமாள் முதலி தெரு,
பெத்துநாயக்கன்பேட், சென்னை.

☆

### வடஆற்காடு மாவட்டம் முதற்பகுதி

வடஆற்காடு மாவட்ட திராவிடர் கழகத்தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தலைமையுடன் தோழர்கள் க. திருமாறன், இரத்தினவேலன், வே. ரா. பூங்காவனம், க. நெடுஞ்சோழன் முதலியோர்.

5-5-46 செய்யாறு
6— வந்தவாசி
7— சேத்துப்பட்டு
8— போளூர்
9— வில்வாரணி
10— திருவண்ணாமலை
11— தண்டராம்பட்டு
12, 13, 14-சுற்றுப்புற கிராமங்கள்
15— செங்கம்
16— புதுப்பாளையம்
17— சோரிப்பனந்தல்
18— பேராம்பட்டு
19— திருப்பத்தூர் (வ. ஆ.)

மற்றவை பின்னர் அறிவிக்கப்படும். விவரங்களுக்கு வடஆற்காடு மாவட்ட அமைப்பாளர் தோழர் வி. எம். இராசமாணிக்கம், வியாபாரம், திருப்பத்தூர் வடஆற்காடு; என்ற முகவரிக்கு எழுதுங்கள். இயக்கத்தோழர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

☆

### வடஆற்காடு இரண்டாம் பகுதி

திருவத்திபுரம் தோழர் ம. நா. இராசமாணிக்கம் அவர்கள் பொறுப்பில் தோழர்கள் பாலசுந்திரன், வே. இராசமாணிக்கம், புலவர் க. கோவிந்தன், புலவர் மாவண்ணா தேவராசன், தணிகை உலகநாதன் முதலியோர்.

5-5-46 வாழ்குடை
6— கோவிலூர்
7— புரிசை

மேலும் இப்பகுதியில் கூட்டம் நடத்த விரும்புவோர் ம. நா. இராசமாணிக்கம், இலட்சுமி நூல் பதிப்பகம், திருவத்திபுரம் என்ற முகவரிக்கு எழுதவும்.

☆

### கோவை மாவட்டம்

தோழர்கள் இராவணன், இளங்கோவன் பாலகுரு ஆகியோர்.

5-5-46 குணியமுத்தூர்
6— புளியகுளம்
7— பாப்பநாய்க்கன்பாளையம்
8— செல்வபுரம்
9— கோவை சுக்கிரவாரப் பேட்டை

மற்றவை பின்னர். கூட்டம் அமைக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

என். இ. பாலகுரு,
பட்டக்காரர் பங்களா, ஈரோடு.

☆

### திருநெல்வேலி மாவட்டம்

தோழர்கள் கே. என். தமிழரசன், கே. வி. கே. சாமி, ந. இமயவரம்பன் ஆகியோர்.

5-5-46 விளாத்திகுளம்
6— மாப்பிள்ளை ஊரணி
7— புதியம்புத்தூர்
8— எரல்
9— சிறுத்தொண்ட நல்லூர்

பிற அடுத்த இதழில். கூட்டங்கள் அமைக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

கே. வி. கே. சாமி,
62, விக்டோரியா ரோடு, தூத்துக்குடி.

☆

### மதுரை மாவட்டம்

தோழர்கள் ஆர். செல்வன் B Sc., இரா. இளங்கோவன், நன்மாறன் ஆகியோர்.

கூட்டம் அமைக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

சி. முத்திருளாண்டி,
55 D புட்டுத்தோப்புரோடு, மதுரை.

☆

### சேலம் மாவட்டம்

தோழர்கள் தா. கு. பாலசுப்பிரமணியம், இளங்கண்ணன், அபிபுல்லா ஆகியோர்.

6-5-46, எளம்பள்ளி
7— சாமையாம்பட்டி
8— வேம்பட்டிதாளம்
9— சேலம்
10— ஜலகண்டாபுரம்
11— சேலம்
12— ஏர்க்காடு
13— சேலம் (ஓய்வு)

14— ஓமலூர்
15— தர்மபுரி
16— பெண்ணாகரம்
17— பாப்பாரப்பட்டி
18— அக்னசாகரம்

மேலும் கூட்டம் அமைக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

பி ஆர். சோமசுந்தரம்,
ஜவுளிக்கடை, மெயின்ரோட்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

☆

## திருச்சி மாவட்டம் முதல் பகுதி

தோழர்கள் சென்னை செம்பியன், பி. சுகந்தர்தன், எம். வடிவேலு, டி. கே. சீனுவாசன், நெடுமாறன் ஆகியோர்.

5-5-46 சிறுகனூர்
6— ஓய்வு
7— குளித்தலை
8— கரூர்
9— திருவளர்சோலை
10— கல்கண்டார் கோட்டை
11, 12, 13- ஓய்வு
14— உறையூர்
15— தென்னூர்
16— பீமநகர்
17— சிந்தாமணி

ஆங்காங்குள்ள தோழர்களும் திராவிடர் கழகங்களும் ஆதரவு தருவதோடு மேலும் கூட்டம் நடத்த விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

ஆர். சுலைமான், அமைப்பாளர்,
திராவிடர் கழகம், பாக்குப்பேட்டை,
உறையூர் போஸ்டு, திருச்சி.

☆

## திருச்சி மாவட்டம் இரண்டாம் பகுதி

பூவாளூர் தோழர் கு. நல்லதம்பி அவர்கள் பொறுப்பில் தோழர்கள் எஸ். செல்வராசு, ஆ. முத்துநெடுஞ்செழியன் ஆகியோர்.

3-5-46 கோப்பாளி
4— அம்பில்
5— செங்கரையூர்
6— மாங்குடி
7— கூடலூர்
8— புள்ளம்பாடி
9— விராகாலூர்
10— கல்லக்குடி
21, 12, 13-ஓய்வு
14— மால்வாய்
15— பிரானத்தூர்

மற்ற ஊர்கள் விவரம் அடுத்த இதழில்.

☆

## இராமநாதபுரம் மாவட்டம்

தோழர்கள் கே. ஆர். பாண்டியன், சி. செங்குட்டுவன், பி. எஸ் முத்தையன் புலவர் குஞ்சிதபாதன் ஆகியோர்

6-5-46 முதல் சிவில்லிப்புத்தூர்
தாலுக்காவில் நடைபெறும்.

பிற இடங்களின் விவரம் அடுத்த இதழில் வரும். கூட்டம் நடத்த விரும்புவோர் கீழுள்ள முகவரிக்கு எழுதுக.

எஸ். என். கருப்பையா,
திராவிடர் கழகம், அருப்புக்கோட்டை.

☆

## தென்னாற்காடு மாவட்டம்

சிதம்பரம் புலவர் ந. மு. மாணிக்கம் அவர்கள் தலைமையில் கீழ்க்கண்ட ஊர்களில் கூட்டங்கள் நடைபெற ஏற்பாடாயுள்ளது. உறுதியான தேதிகள் மதுரை மாநாட்டிற்குப்பின் அறிவிக்கப்படும். அந்தந்த ஊர்த் தோழர்கள் கூட்டத்திற்குத்தக்க ஏற்பாடு செய்யும்படி வேண்டப்படுகிறது.

சிதம்பரம், குயவன்பேட்டை, பின்னத்தூர், வல்லம்படுகை, சாலியந்தோப்பு, முள்ளங்குடி, வெள்ளூர், குமராட்சி, மன்னார்குடி, சேத்தியாதோப்பு, ஓடாக்கநல்லூர், திருமுட்டம், காவனூர், புவனகிரி, கீரப்பாளையம், சிதம்பரம், கூடலூர் O. T, மாலுமியார்பேட்டை, வண்டிப்பாளையம், மஞ்சகுப்பம், புதுப்பேட்டை, விழுப்புரம், கீழ்ப்பெரும்பாக்கம், திண்டிவனம், காவேரிப்பாக்கம், தாதாபுரம், இரெட்டணை, ஒலக்கூர், விருத்தாசலம், பெண்ணாகடம், திட்டக்குடி, குறிஞ்சிப்பாடி.

மற்ற ஊர்களில் கூட்டம் அமைக்கவும் விவரம் தெரிந்துகொள்ளவும் விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

புலவர் ந. மு. மாணிக்கம்,
தமிழாசிரியர்,
ஆர். சி. டி உயர்நிலைப்பள்ளி,
சிதம்பரம்.

---

## புதுக்கோட்டை தோழர் ராம. சின்னையா

தோழர் ராம. சின்னையா அவர்கள் சிறம்பானிலிருந்து 27-3-46ல் புறப்பட்டு சிங்கை, பம்பாய் வழியாக 1-5-46ல் சுகமாக புதுக்கோட்டை வந்து சேர்ந்தார்கள்.

---


## நூதன பாக்கட் ஸ்டவ் அடுப்பு

காப்பி, டீ, குழந்தைகளுக்குப் பால் போன்ற அவசரமாக காய்ச்சிக்கொள்ளக் கூடிய சிறிய அடுப்பு. கரி, எண்ணை தேவையில்லை. வண்டிப்பிரயாணம் முதலியவைகளுக்கு உபயோகித்துக்கொள்ளலாம். ஒரு தடவை ஆர்டர் கொடுத்துப் பாருங்கள். குறைந்த விலை ரூ. 2-4-0.

மு. கண்ணன்,
20, சீனிவாச ஐயர் தெரு,
ரெல்வயல்ரோட், செம்பியம் P. O.
மதராஸ்.


# எப்பொழுது முடிவது?

இவ்வாண்டிற்கு குறைந்தது ஒரு இலட்சம் அங்கத்தினர்களை திராவிடர் கழகத்திற்குச் சேர்ப்பது என தீர்மானிக்கப்பட்டது. மாதங்கள் நான்கு கடந்துவிட்டன. அங்கத்தினர்கள் எண்ணிக்கை இன்னும் நாற்பத்து மூவாயிரத்திலேயே இருக்கிறது. வாரத்திற்கு ஆயிரம் அல்லது அதற்கும் குறைவாகவே சேர்த்தனுப்பப்படுகிறது. இவ்விதம் சேர்த்துக்கொண்டிருப்பதானால் தோழர்கள் இவ்வருடம் முழுமையும் கொண்டால்கூட இலட்சம் எண்ணிக்கையை எட்டிப் பார்க்கவும் முடியாதென அஞ்சுகிறேன். நிர்வாகக்கமிட்டி உறுப்பினர்களும், கழகங்களும், கறுப்புச்சட்டைத் தொண்டர்களும் மனம் வைத்து முயன்றால் வாரத்திற்கு பத்தாயிரம் உறுப்பினர்களையாவது சேர்க்க முடியாதா? அன்புகூர்ந்து ஆவன செய்ய வேண்டுகிறேன். இலட்சம் உறுப்பினர்களைச் சேர்த்த பின்னர்தான் அடுத்த மாகாண மாநாடு நடத்துவதுபற்றி யோசிக்கலாம் என்று சென்ற நிர்வாகக் கமிட்டி கூட்டத்தில் முடிவு செய்ததையும் தோழர்களுக்கு நினைவு படுத்தி, விரைவில் கடமையைச் செய்து முடிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

செயலாளர்,
மத்திய திராவிடர் கழகம்,
கச்சேரிவீதி, ஈரோடு.

---

## பெரியார் ஈ. வெ. ரா.

(4-5-46) இன்று இரவு சென்னை செல்கிறார்.

---

## கணியூர் பகுத்தறிவு படிப்பக உதவி நிதி

மேற்படி நிதிக்காக கணியூரில் 5-5-46 ஞாயிறு இரவு 8-30 மணிக்கு சங்கீத வித்வான் இசை ஒளி A. D. சுல்தான் பார்ட்டியாரால் சங்கீதக்கச்சேரி பழய கோட்டை இசையபட்டக்காரர் தோழர் என். அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அனைவரும் வருக.

## தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம்

10-4-46ல் கல்லலில் இராமநாதபுரம் மாவட்ட தாழ்த்தப்பட்டோர் சம்மேளன ஸ்பெஷல் கூட்டம் தோழர் வி. எஸ். சிதம்பரம் அவர்கள் தலைமையில் நடைபெற்று பிரிட்டிஷ் தூதுகோஷ்டியை வரவேற்பதாகவும், டாக்டர் அம்பேத்கார் அவர்களின் திட்டங்களை முழு மனதுடன் ஏற்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

நமது எதிர்கால வேலையை நிர்ணயிக்கும் முக்கியமான

முதலாவது மாகாண

# கறுப்புச்சட்டைப்படை மாநாடு

★

மதுரையில் 1946ம் ஆண்டு மேமீ 11, 12-தேதிகளில் (சனி, ஞாயிறு) தியாகராய நகரில் (வைகையாற்றின் பாலத்திற்குக் கீழ்புறம்) அமைத்திருக்கும் நாகம்மையார் பந்தலில்

## பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில்

நடைபெறும்.

திறப்பாளர்:-
தளபதி C. N. அண்ணாதுரை M. A.,
(மத்திய திராவிடகழகப் பொதுச் செயலாளர்)

கொடி ஏற்றுபவர்:-
N. அர்ச்சுனன்
(மத்திய திராவிட கழகத் துணைத் தலைவர்)

திராவிடநாட்டுப் படத்திறப்பு:-
S. R. காந்தி அம்மையார் B. A. (Hons)

தாலமுத்து நடராசன் படத்திறப்பு:-
V. R. நெடுஞ்செழியன் B. A. (Hons)

மற்றும்

மத்திய திராவிட கழகத்தலைவர், வழக்கறிஞர் டி. பி. வேதாசலம், ம. தி. க. துணைச் செயலாளர் ஆ. திராவிடமணி பி. ஏ., அன்பழகன் எம்.ஏ., ஜனார்த்தனம் எம். ஏ., காஞ்சி கல்யாண சுந்தரம், C. D. T. அரசு, எஸ். ஆர். சுப்பிரமணியம், ஈ. வி. கே. சம்பத், மூவலூர் ராமாமிர்தத்தம்மையார் மற்றும்பலர் கலந்துகொள்வார்கள்.

11-5-46 சனி அன்று பொன்மலை திராவிடர் வாலிபர் கழகத்தாரால், தளபதி சி. என். அண்ணாதுரை எழுதிய "அவன் பித்தனா" என்ற நாடகமும்,

12-5-46 ஞாயிறு அன்று தோழர் எம். ஆர். ராதா பார்ட்டியாரால், "போர் வாள்" நாடகமும் நடைபெறும்.

நன்கொடையாளர்களுக்கும் வரவேற்பு குழுவினருக்கும், பிரதிநிதிகளுக்கும் மட்டுமே நாடகம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

வரவேற்பு குழு ரூ. 3-0-0, பிரதிநிதி ரூபாய் 1-0-0,
பெண்களுக்குக் கட்டணம் கிடையாது.

ஒரு ரூபாய்க்குக் குறைந்த டிக்கட்டுகள் கிடையாது.
இயக்கத்தோழர்கள் கறுப்புச்சட்டையோடு வர எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

P. செங்குட்டுவன், வரவேற்புக்குழுத் தலைவர்.
K. I. சுக்கினி, பொருளாளர்.
மு. ராசகோபால் & E. V. K. சம்பத், செயலாளர்கள்.
பு. ரா. மதிவாணன், துணைத்தலைவர்.
ச. பழனிவேல் & எஸ். முத்து, அறிவிப்பாளர்கள்.
எஸ். தவமணிஇராசன், துணைச்செயலாளர்.

---

மாநாட்டிற்கு வரும் தலைவர்களுக்காக, மாநாட்டுப் பந்தலுக்கு அருகிலேயே ஷெனாய் நகரில் ஒரு பெரிய பங்களா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்றும் பல பங்களாக்களும், சத்திரங்களும் குடும்ப சகிதம் வருபவர்களுக்கும், பிரதிநிதிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. குடும்ப சகிதம் வருபவர்கள் முன் கூட்டித் தெரிவித்தால் தக்க வசதி செய்து கொடுக்கப்படும்.

மாநாடு முதல்நாள்காலை புதைவண்டி நிலையத்திலிருந்து பெரியதொரு ஊர்வலம் புறப்பட்டு எல்லா முக்கிய தெருக்களிலும் வந்து உச்சிப்பகல் வரையும் நடைபெறும்; மாலை 2-மணிக்கு மாநாடு ஆரம்பம் மாநாட்டுத் தீர்மானம் அனுப்புவர்களும், யோசனை கூறுபவர்களும் 8-5-46க்குள் அனுப்பிவைக்க வேண்டும்.

மாநாட்டின் டிக்கட்டுகளைப் பெற்றுள்ள தோழர்கள் தயவுசெய்து 8-5-46 புதன்கிழமைக்குள் எங்களுக்குக் கிடைக்கும்படி அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்கிறோம். ஸ்டால் விரும்புகிறவர்கள் ஷை தேதிக்குள் 20 ரூபாய் வாடகையுடன் எழுதவும். மாநாட்டு நடவடிக்கையைப் படமெடுக்க சித்திரகலா மூவிடோனாருடன் ஏற்பாடுசெய்ய முயற்சிக்கப்படுகிறது.

மேலும் ஊர்வலங்களையும், ஸ்டால்களையும், பந்தல்களையும் படமெடுக்க புகைப்படம் எடுப்பவர்களில் பலர் ஒப்புக்கொண்டுள்ளார்கள். மாநாட்டு நடவடிக்கைகள் புத்தக ரூபமாக 100 போட்டோ படங்களுடன் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

(விளம்பரம்)

குடி அரசு

1946-ஆம் ஆண்டு மே-மீ 4உ

## மதுரை மாநாடு

மதுரையில் இம்மாதம் 11, 12உ சனி, ஞாயிறுகளில் மாகாண கறுப்புச்சட்டைப்படை மாநாடு நடத்தப்படப்போகிறது. இம் மாநாடானது திராவிட நாட்டின் சரித்திரத்தில் முக்கிய இடம்பெறக் கூடிய மாநாடாக இருக்கும். திராவிடநாட்டை திராவிட மக்கள் அடைந்தே தீருவது என்பதற்கு கால் நாட்டுவிழா என்றே சொல்லுவோம். இதுவே திராவிட இளைஞர்களின் தன்மானத்தையும், தகுதியையும் மதிப்பிடும் மாநாடாகும்.

இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் சிறைசென்று வெற்றியோடு விடுதலையானபின் தொடர்ந்து செய்யப்பட்டுவந்த இந்த 7வருட கால பிரசாரத்தின் பயனாய் திராவிட மக்கள் மாணவர்கள் இளைஞர்கள் ஆகியவர்களின் உணர்ச்சியையும் எழுச்சியையும் உணரவும், அதை எப்படி பயன்படுத்திக் கொள்வது என்று சிந்திக்கவும் அதற்கேற்ற காரியத்தை துவக்குவதற்கு நாடி பார்க்கவும் கூட்டப்படும் மாநாடாகும்.

எனவே திராவிட இன உணர்ச்சியும், நாட்டுப்பற்றும் உள்ள இளைஞர்கள் படித்தவர்களானாலும், படியாதவர்களானாலும் செல்வர்களானாலும், வறியர்களானாலும், வேலையுள்ளவர்களானாலும், வேலையற்றவர்களானாலும் ஆண் பெண் இருபாலரும் தயங்காமல் மாநாட்டுக்கு வந்து பங்கு கொண்டு பணியாற்ற முன்வர வேண்டியது இதுசமயம் அவசரமும் அவசியமுமான காரியமாகும்.

திராவிடநாடும், இனமும் சிறிது திராவிட இரத்தம் உள்ள ஆளை ஞனையும், திராவிடத் தொண்டாற்ற, தன் கடமையைச்செய்ய அழைக்கின்றது.

திராவிடநாடு எவ்வளவு கால மாக அடிமை? திராவிட இனத்திற்கு எவ்வளவு இழிதன்மையான தாழ்வு? இதற்கு யார்தான் பரிகாரம் செய்வது? என்பனவற்றை எந்த இளைஞனாவது சிந்திப்பானானால் அவன் மதுரைக்கு வந்து மாநாட்டில் கலந்து சமீபத்தில் ஏற்படப்போகும் பலிபீடத்தில் தனக்கு இடம் ஒதுக்கிக்கொள்ளாமல் இருக்கமுடியாது என்றே சொல்லுவோம்.

இன்று திராவிடநாட்டில் ஆரிய (பார்ப்பன) ஆட்சி அரியணையேறிவிட்டது. திராவிட மக்கள் சிலர் அவ் அரியணையைத் தாங்கிக் கொண்டு கட்டியம் கூறுகின்றனர். இந்த சமயத்தில் திராவிட இன உணர்ச்சி கொண்ட இளைஞர்கள் மதுரையில் கூடுகிறார்கள் என்றால் அக்கூட்டம்தான் கறுப்புச்சட்டைப்படை மாநாடு என்றால் இதை தங்கள் எதிர்கால விதியை, கடமையை அமைக்கும் மாநாடு என்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே இளைஞர்கள் யாவரும் ஆண் பெண் இருபாலரும் இச்சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் அவசியம் வந்து பங்கு கொண்டு கடமையை யேற்க வேண்டுகிறோம்.

## கிருஷ்ணன்—பாகவதர்

கலைவாணர்கள் என்.எஸ். கிருஷ்ணன், எம். கே. டி. பாகவதர் இவர்களை விடுதலை செய்யும்படி பல நகரசபைகளும், பொதுமக்களும் கேட்டுக்கொண்டும் அட்வைசரி சர்க்கார் இருவரை அவ் வேண்டுகோளைக் கவனிக்கவில்லை. இப்பொழுது பொதுமக்கள் சர்க்கார் என்பது வந்துள்ளதால் இவர்களேனும் இசைமணிகள் இருவரிடமும் கருணை காட்டி உடனே விடுதலை செய்வார்களென்று பொதுமக்கள் எதிர்பார்க்க உரிமையுண்டு.

ஆதலால் நாட்டிலுள்ள எல்லா நகரசபைகளும், பொதுமக்கள் கழகங்களும், தனிப்பட்ட பிரமுகர்களும், முன்போலவே இரு கலைஞர்களுக்கும் கருணை கோரி சென்னை மந்திரிசபை நீதி மந்திரிக்கு தீர்மானங்களை தந்திமூலமும், தபால் மூலமும் உடனே அனுப்பிவைக்க வேண்டியது அவசியமாகும்.

## ஆரியம் அரியணையேறிவிட்டது

சென்னைக்கு ஆரிய மந்திரி சபை அமைந்துவிட்டது. சபை யார் யார் என்றால் பார்ப்பனர்கள், படித்தவர்கள் என்கின்ற இரு கூட்டத்தாருமாகத்தான் வந்திருக்கிறார்கள். இன்றைய தேர்தல் முறையில் இக்கூட்டத்தவர்தான் வரமுடியும் என்று பல தடவை சொல்லி வந்திருக்கிறோம். ஏனென்றால் இந்த தேர்தல் முறையில் பார்ப்பனருக்கும் படித்தவனுக்கும்தான் ஓட் இருக்கிறது. ஓரளவு பணக்காரனுக்கும் ஓட்டு இருக்கிறதென்றால் அவர்கள் மேலிரு கூட்டத்தைச் சேர்ந்தவர்களாவார்கள் அல்லது இவ்விரு கூட்டத்தின் அடிமைகளாவார்கள். இந்த நாட்டு தேர்தல்களில் ஓட்டர்களின் எண்ணிக்கை 100க்கு 14 பேராகும். படித்தவர்களுடைய எண்ணிக்கை 100க்கு 12 ஆகும். குறைந்த அளவு சொத்துடையவர்களும் 100க்கு 10பேராக இருக்கலாம் என்றாலும் இவர்களில் பெரும்பாலோர் படித்தவர்களும் சொத்துடையவர்களுமாயிருக்கலாம். ஆகையால் ஓட்டர்கள் இந்த இரு கூட்டத்தினரிடை இருந்தே எடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதலாலேயே வந்திருப்பவர்களும் இந்த இரு கூட்டத்தைச் சேர்ந்தவர்களேயாவார்கள். உண்மையான ஏழைமக்களுக்கோ, தொழிலாளிகளுக்கோ, பாமரக் கூலி மக்களுக்கோ பிரதிநிதியாக இவர்களுக்கு நேர்மாறான தன்மையுடையவர்களாகவே அமைந்திருக்கிறார்கள். இதில் திராவிட உணர்ச்சியுள்ளவர்களாவது தன்னைத் திராவிடன் என்று எண்ணிக்கொண்டிருக்கிறவர்களாவது ஒருவரும் இல்லையென்று

உறுதியாய்ச் சொல்லலாம். மேலும் இவர்களுக்கு திட்டம் என்ன? இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? என்பதைக்கூட தெரிய முடியவில்லை. அவர்களுக்கும் தெரியாதென்றே சொல்லலாம். ஆனால் ஒவ்வொருவரும் பதவி ஏற்றதும் மக்களை ஏமாற்ற வீரப் பிரதாபமாகப் பேசி இருக்கிறார்கள். உதாரணமாக சட்ட மந்திரியாக வந்த பார்ப்பனர் "அரசியல் கைதிகளை விடுதலைசெய்து தண்டவரிகளை ரத்துசெய்து விடுகிறேன்" என்று சொல்லியிருக்கிறாரே தவிர இந்த நாட்டிலுள்ள அடிமைச் சட்டத்தை, இழிவு சட்டத்தை, மக்களை மக்கள் சுரண்டும் சட்டத்தைநீக்கி நீதியை மனிதத்தன்மையை நிலைநிறுத்துவதாகச் சொல்லவில்லை. அவரால் நீக்கவும் முடியாது, அப்படி நீக்கினால் அவர் பார்ப்பனரா(பிராமணரா)க இருக்க முடியாது. தொழிலாளி மந்திரியாக வந்துள்ள மற்றொரு பார்ப்பனர் தொழிலாளிகளைக் காப்பாற்றுகிறேன் என்று சொல்லிக்கொள்கிறாரே தவிர தொழிலாளி முதலாளி என்கின்ற பேதமில்லாமல் யாவரையும் பங்காளியாக இருக்கச்செய்கிறேன் என்று சொல்ல முடியவில்லை. அப்படிச் சொன்னால் முதலாளிகளிடம் இருந்து கப்பம் வாங்க முடியாது. கல்வி மந்திரியாக வந்துள்ள ஒரு பணக்காரர் ஆசிரியர்களின் அந்தஸ்தை உயர்த்துவதாகப் பேசியிருக்கிறாரே தவிர இந்நாட்டிலுள்ள 100க்கு 90பேர்களின் தற்குறித் தன்மையைப் போக்குவதாகப் பேசவில்லை. இதுபோல் தான் மற்றவர்களும் பேசி இருக்கிறார்கள்.

ஆகவே மக்களுக்கு என்ன செய்வது என்று தெரியாதவர்களும், செய்வதால் தங்கள் சொந்தத்தில் பாதிக்கப்படுகிறவர்களாகவுமே மந்திரிகளாக வந்திருக்கிறார்களேயல்லாமல் துணிந்து இன்றைய நடைமுறைக் கேடுகளில் ஓர் பெரிய மாற்றத்தை செய்யக்கூடியவர்களாக ஒருவரும் வரவில்லை என்றே சொல்லலாம். தீண்டாமை விலக்கு, ஜாதி பேதம் ஒழித்தல், மது வியாபாரத்தை யொழித்தல் முதலாளிகள் வளர்ச்சியை தடுத்தல் ஏமாற்றுச் சுரண்டல்கள் நீக்கல் ஆகிய காரியங்களைத்தங்கள் நிர்மாணத் திட்டம் என்று சொல்லிப் பறையடித்துவிட்டு பதவிக்கு வந்தவுடன் மக்களை ஏமாற்றும் பேச்சு பேசுவதென்றால் இந்தக்காலத்தில், அதுவும் இன்றுள்ள நிலைமையில் இவர்கள் மந்திரிசபை அரியணை எப்படி நிலைத்திருக்கமுடியும்? மக்கள் இவர்கள் செய்கையை எவ்வாறு பொறுத்துக் கொண்டிருக்கமுடியும்? என்பது நமது கேள்வியாகும் ஆதலால் இவர்கள் கூடப்போகும் முதல் சட்டசபைக் கூட்டத்திலிருந்தே இவர்கள் உண்மையாகவும் நாணயமாகவும் நடந்துகொள்ளும் தன்மையைக் காட்டாதபட்சத்தில் அதன் பயனை இவர்கள் அனுபவிப்பார்களென்றும், இவர்கள் பதவி மாதக்கணக்கில்கூட நிலைக்காது என்றும் "ஜோசியம்" கூறுகிறோம்.

---

## பார்லிமெண்டரி மந்திரிகள் திட்டம்

பார்லிமெண்ட் மந்திரிகள், பாகிஸ்தான், இந்துஸ்தான் பிரச்னையைத் தீர்ப்பதற்காக ஒரு திட்டம் தயாரித்து, முஸ்லிம் தலைவரையும், இந்து தலைவரையும் அழைத்து பேசுகிறார்கள். இதில் காங்கரசை இந்துக்கள் ஸ்தாபனம் என்பதும், லீக்கை முஸ்லிம்கள் ஸ்தாபனம் என்பதும் முடிவு செய்யப்பட்டிருப்பதோடு காந்தியை இந்து தலைவராகவும், ஜின்னாவை முஸ்லிம் தலைவராகவும் தூது கோஷ்டியார் கருதிவிட்டார்கள். அதோடு இந்தியாவை இரண்டு மூன்று நாடுகளாகப் பிரித்து தனி ஆட்சி அளிப்பதையும் ஒப்புக்கொண்டு விட்டார்கள். இவை ஒரு அளவுக்கு திராவிட கழகப் பிரச்சினைகள் மேலிடத்து மேடையேறி விவாதத்துக்கு வந்துவிட்டது என்பதை மெய்ப்பிப்பதாகும். ஜின்னா சாயபு கேட்கும் மாகாணங்கள் முஸ்லிம் பெடரேஷனாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. மற்றவைகள் முஸ்லிம் அல்லாதார் மாகாணங்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. முஸ்லிம் அல்லாதார் மாகாணங்கள் தனியாக ஆனவுடன் திராவிடர் மாகாணம், மராட்டி மாகாணம் முதலாகிய மாகாண பெடரேஷன்கள் பிரியவேண்டியதே, பிரிந்துதான் தீரும்.

இப்பொழுது பிரிக்கும் முஸ்லிம், முஸ்லிமல்லாதார் பெடரேஷன்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளை ஜின்னாசாயபு, ஒப்புக்கொள்வாரா என்பது சந்தேகம்.

இந்த பெடரேஷன் பிரிவினையில் மத்திய அரசாங்கம் அல்லது கூட்டாட்சி என்பதாக ஒன்று இருக்குமென்றும் அதற்கு இராணுவம், அன்னியநாடு விவகாரம், போக்குவரத்து வசதி, சுங்கம், (வெளி சாமான்களுக்கு வரி விதித்தல்) ஆகிய இலாக்காக்களின் ஆதிக்கம் இருக்குமென்றும் இவை தவிர்த்து, மற்ற இலாக்காக்களைப் பற்றி மாகாணங்களுக்கு முழு சுதந்திரம் இருக்குமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவைகளில் வெளிநாட்டுச் சாமான்களுக்கு வரிவிதிக்கும் உரிமையை மத்திய அரசாங்கத்துக்கு வைத்துக்கொண்டதானது இந்தியாவை பனியா ஆட்சிக்கு உட்படுத்தியிருப்பதாகும்.

ஒரு மாகாணத்திற்கு பூர்ண சுயேச்சை இருக்கிறதென்றால் அந்த மாகாணத்திற்கு அன்னிய சாமான் வராதபடி வரிவிதிக்கும் உரிமை இருப்பதுதான் சிறிதாவது பூர்ண சுதந்திரம் இருப்பது என்று சொல்வதற்கு உண்மையான அர்த்தமாகும். அப்படி இல்லாமல் உதாரணமாக சென்னை மாகாணத்திற்கு பூர்ண சுயாட்சி கொடுத்துவிட்டு சென்னையிலிருக்கும் பருத்தியையும் இரும்பையும் மூலப்பொருளையும் ஆமதாபாத்காரனும் டாட்டா பாட்டா நகர்காரனும் வாங்கிக்கொண்டு போய் அங்கிருந்து துணியையும் பண்டங்களையும் பாத்திரங்களையும் செய்து சென்னை மாகாணத்திற்கு அனுப்பி சென்னை மாகாணத்து பணத்தை கொள்ளையடித்துக் கொண்டு

போவதென்றால் இது எந்த வகையில் சுதந்திரமாகும்? இங்கிருக்கும் தொழிலாளிகதி என்னாவது? முதலின் கதி என்னாவது? இது போல் அநேக வழியில் வெளிநாட்டான் கொள்ளையடிக்க இடமேற்பட்டுவிடும். ஆதலால் ஒருநாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும், தொழிலாளிகளின் நல்வாழ்விற்கும் டாரிப் அல்லது சுங்கம், அல்லது சாமான்களுக்கு வரிவிதிக்கும் உரிமை அந்தந்த மாகாணத்திற்கே இருக்கவேண்டியது அவசியமாகும். மற்றும் வெளி மாகாணத்தான் உள்ளே வந்து வியாபாரம் துவக்குவதோ, லேவாதேவி செய்வதோ ஆன காரியங்களுக்கு மாகாண சர்க்கார் அனுமதி இல்லாமல் செய்யப்படுவதென்றால் அதுதான் எப்படி மாகாண சுதந்திரமாகும். ஆனதால் இந்தக் காரியங்கள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் மாகாண ஆட்சிக்கு உட்படுத்தப்படாவிட்டால் ஜின்னா ஒப்புக்கொள்ள மாட்டார்.

### இராணுவம்

இராணுவம் மத்திய அரசாங்கத்துக்கு உட்படுத்தப்படும் என்றிருப்பதில் மாகாண பாதுகாப்பு சுதந்திரம் அடியோடு பறிமுதல் செய்யப்பட்டதாகும். ஒரு பெடரேஷனுக்கு அல்லது சில கூட்டு மாகாணங்களுக்கு ஏற்பாடு செய்யப்படும் இராணுவ வீரர் தொகையில் அந்தந்த மாகாண வீதாசார இராணுவவீரர்கள் அந்தந்த மாகாணத்தில் அந்தந்த மாகாண இனங்களிலிருந்துசேர்க்க(ரெக்ரூட் செய்ய)ப்படவேண்டும். அந்தந்த மாகாண வீதாச்சார இராணுவச் செலவு தொகையை பெரிதும் அந்தந்த மாகாணத்தில் அவரவர்களே செலவழித்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இராணுவத்திற்கு உண்மையான நாட்டுப்பாதுகாப்பு உணர்ச்சியும், பொருளாதாரப் பாதுகாப்பும் ஏற்படும். அப்படிக்கு இல்லாமல் இராணுவத்தின் பேரால் யாரோ ஒரு மாகாணக்காரர் அதிகமாகப் பயன் அனுபவிப்பதும், ஒருவர் தொகையை யாரோ ஒருவர் ஏதோ ஒரு மாகாணத்துக்கு செலவழிப்பதுமான காரியம் முதலியவை தடைப்படுத்தப்படும் இவைகளைப்பற்றி லீக் தலைவர்கள் கவனிப்பார்களென்றே கருதுகிறோம். கவனியாவிடில் இந்த உரிமைகளில்லாத ராஜி என்பது வெறும் ஏமாற்றுவித்தைதான் என்பதோடு போராட்டம் தீர்ந்துவிடுமென்று கருதுவதற்கும் இடமிருக்காது.

பொதுவாகவே எதற்காக? மத்திய அரசாங்கம் என்றோ அல்லது கான்படரேஷன் என்றோ ஒன்று ஏன் இருக்கவேண்டுமென்பதற்கு சரியான காரணம் ஒருவரும் சொல்லவில்லை. இந்தியா துண்டாடப்படக்கூடாது என்பது எந்தவிதத்திலாவது முஸ்லிம்களை திராவிடர்களை ஆரியர்-பனியாக்கள் ஏமாற்ற வேண்டுமென்பதல்லாமல் வேறு அறிவுடைமையோ, தேவையோ இத்திட்டத்தில் இருப்பதாகத் தெரியவில்லை.

## நடக்க இருப்பவை

● 7-5-46 செவ்வாய்க்கிழமை தோழர் எ. ராமசாமி எம். எ. எல் டி., (பிரின்ஸ்பால் சேலம் கல்லூரி) அவர்கள் தலைமையில் பட்டுக்கோட்டை திராவிட மாணவர் கழக 3வது ஆண்டுவிழா நீலா டாக்கீசில் நடைபெறும். தோழர்கள் அன்பழகன், சம்பத், ஜனார்த்தனம், கருணாநிதி, புலவர் மாணிக்கம், தோழியர் மங்கையர்க்கரசி, முத்துக்கண்ணு முதலியோர் கலந்து கொள்வார்கள்.

● 6-5-46 திங்கள்கிழமை மாலை 4மணிக்கு கூடலூர் O T. தோழர் வி.கே.எஸ். சண்முகசுந்தரம் அவர்கள் மண்டியில் தெ. ஆ. மாவட்ட திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு நிர்வாகக் கமிட்டி அமைப்புக்கூட்டம் நடைபெறும். மாவட்டத்தில் ஆங்காங்குள்ள கழக நிர்வாகஸ்தர்கள் இதனையே அழைப்பாகக் கொண்டு வந்திருந்து நிர்வாகக் கமிட்டியை அமைத்துதவ வேண்டுகிறேன்.

வி. கே. எஸ். சண்முகசுந்தரம்.

## திண்டிவனம் தாலுக்கா தோழர்களுக்கு

திராவிடர் கழக அங்கத்தினர்களாகச் சேரவேண்டியவர்கள் திண்டிவனம் கடைத்தெரு இரும்பு வியாபாரம் டி. எ. எஸ். பழனி அவர்கள் முகவரியிலும், துணிக்கடை ரா. வெங்கிடேசன் அவர்கள் முகவரியிலும் சேரலாம்.

## திருச்சி ஜில்லா ஷெட்யூல்டு வகுப்புபெடரேஷன் உழவுத் தொழிலாளர் மாநாடு

மேற்படி மாநாடு குளித்தலை தாலுக்கா மகாதானபுரத்தில் 21-4-46ல் தோழர் வி. எம். பழனிவேல் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர்களின் ஊர்வலத்திற்குப்பின் காலை 11மணிக்கு மாநாடு தொடங்கியது.— தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மாநாட்டைத் திறந்துவைத்தார். தோழர் எம். சிங்காரம் பெடரேஷன் கொடியை ஏற்றுவித்தார். தோழர் தி. க. சுப்ரமணியம் அனைவரையும் வரவேற்றார். தோழர் வி. எம். பழனிவேல் அவர்கள் மாநாட்டுத் தலைமையுரையை நிகழ்த்தினார். தோழர் சேலம் எ. சித்தையன் டாக்டர் அம்பேத்கார் படத்தைத் திறந்துவைத்தார்.

மாநாட்டுப் பந்தலிலேயே தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் பள்ளர் வகுப்பு வித்வான் இரத்தினத்திற்கும், நாயுடு வகுப்பு வித்வாத்ன கமலாம்பாளுக்கும் கலப்புமண வாழ்க்கையொப்பந்தம் நடைபெற்றது.

பிற்பகலில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் பி. செல்லமுத்து நன்றி கூற மாலை 6-30 மணிக்கு மாநாடு முடிவுற்றது.

## தெ. ஆ. மாவட்ட திராவிட மாணவர் 2வது மாநாடு

சனவரி மாத முதல் வாரத்தில் நடத்துவதாக விருந்த மேற்படி மாநாடு தவிர்க்கமுடியாத பல காரணங்களால் தடைபட்டு வந்ததால் 30-5-46 வியாழனன்று கல்லக்குறிச்சியில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் உறுதியாக நடைபெறும். தி. வாசு,

திராவிடர்கழக செயலாளர்,
கல்லக்குறிச்சி.

## செங்கற்பட்டு மாவட்ட திராவிடர் கழக மாநாடு

28-4-46 ஞாயிறன்று காஞ்சிபுரம் திராவிடநாடு அச்சகத்தில் தளபதி சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நிகழ்ந்த திராவிடர் கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் செங்கற்பட்டு மாவட்ட திராவிடர் மாநாட்டை ஜூன் 15, 16 தேதிகளில் காஞ்சியில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ரோஜா முத்தையா

## குடந்தையில்

# தஞ்சை மாவட்ட மாநாடுகள்

18, 19-5-46 சனி ஞாயிறு கிழமைகளில் கும்பகோணத்தில் சர் பி. தியாகராயர் பந்தலில் நடைபெறும்.

### 18-5-46 திராவிடர் மாநாடு

தலைவர்:-

**என். அர்ச்சுனன் அவர்கள்**

(இளைய பட்டக்காரர்) பழையகோட்டை.

18-5-46 சனிக்கிழமை இரவு 9-30 மணிக்கு காஞ்சி திராவிட நடிகர் கழகத்தாரால் மாநாட்டின் பந்தலிலேயே "சந்திரோதயம்" என்ற நாடகம் தலைவர் பெரியார் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

### 19-5-46

### சுயமரியாதை மாநாடு

தலைவர்:- விருதுநகர் தோழர்

**A. V. P. ஆசைத்தம்பி அவர்கள்**

19-5-46 ஞாயிறு இரவு 9-30 மணிக்கு காஞ்சி திராவிட நடிகர் கழகத்தாரால் "சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்" என்ற நாடகம் தஞ்சைத்தோழர் பி. வேணுகோபால் பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் நடைபெறும்.

மாநாட்டுக்கான எல்லாவிதக் காரியங்களும் தீவிரமாகச் செய்யப்படுகிறது.

மாநாடுகள் நடைபெறும் இரு தினங்களிலும் தலைவர் பெரியார், தளபதி அண்ணாதுரை, புரட்சிக்கவி பாரதிதாசன், பட்டுக்கோட்டை அழகிரிசாமி, இரா. நெடுஞ்செழியன், அன்பழகன், எ. பி. ஜனார்த்தனம், ஈ.வெ.கி. சம்பத், டி. பி. வேதாசலம், காஞ்சி கலியாணசுந்தரனார், டி. கே. சீனிவாசன், புலவர் மாணிக்கம், கோ.சி. பெரியசாமிப்புலவர், இளம்வழுதி, தவமணிஇராசன், சத்தியேந்திரன் இன்னும் பல அறிஞர்களும் பேருரையாற்றுவார்கள்.

பிற பின்னர் அறிவிக்கப்படும்.

வரவேற்புக்குழு செயலாளர்.

### கொடி பறக்கட்டும்

நெல்லை மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு திராவிடர்கழகத் தோழருடைய வீடு, கடை மற்றும் முக்கிய இடங்களிலும் நமது கழகக்கொடியை பறக்க விட வேண்டுமென நெல்லைமாவட்ட தி. க. செயலாளர் கே. வி. கே. சாமி வணக்கமாகக் கேட்டுக்கொள்கிறார்.

### கோவை மாவட்ட திராவிடர் மாநாடு

1-5-46ல் நடைபெற்ற ஈரோடு திராவிடர் கழக நிர்வாக கமிட்டி கூட்டத்தில் புலமுறை ஒத்திவைக்கப்பட்ட கோவை மாவட்ட திராவிடர் மாநாட்டை 9-6-46ல் உறுதியாக நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. தோழர் மா. சிங்காரவேல் அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

### திருச்சி வரகனேரியில் திராவிடர் கூட்டம்

22-4-46 திருச்சி வரகனேரி குழுமித்தெரு வைக்கம் வீரர் வாசகசாலை ஆண்டுவிழா நடைபெற்றது. பெரிய மார்க்கட்டிலிருந்து தலைவர்கள் ஊர்வலம் நடைபெற்றதும் தோழர் திராவியம் அவர்கள் தலைமையில் தோழர் தி. பொ. வேதாசலம் அவர்கள் சிறிது நேரம் பேசியபின் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் பலத்த கைதட்டலுக்கிடையே எழுந்து சுமார் 3 மணி நேரத்திற்குமேல் பிரிட்டிஷ் காங்கரஸ் கூட்டு ஒப்பந்தம், திராவிடநாட்டின் பிரிவினை இவைகளைப்பற்றி விளக்கமாகப் பேசினார்கள். தோழர் பிரான்சிஸ் நன்றிகூறினார். தோழர் பி. மாணிக்கம் அவர்கள் மகன் செல்வராசு ரூ. 5ம், வரகனேரி தியாகராய வாசகசாலை சார்பில் தோழர் திராவியம் அவர்களால் ஓர் வாழ்த்துப் பத்திரமும், ரூ 2ம் பெரியாருக்கு அளிக்கப்பட்டது.

### திராவிட மாணவர் மாகாண கழகம்

மேற்படி கழக நிர்வாகக்கமிட்டி கூட்டம் மதுரையில் சதப்பசட்டைப்பனை மாநாடன்று 11-5-46ல் நடக்குமாதலால், உறுப்பினர்கள் அனைவரும் இதனையே அழைப்பாகக்கொண்டு வரவேண்டுகிறேன். முக்கியமான பல காரியங்கள் முடிவு செய்யவேண்டியுள்ளது.

இரெ. இளம்வழுதி,
செயலாளர்.

### அடுத்த வாரம்

28-4-46ல் நடைபெற்ற வடசென்னை முதல் சர்க்கிள் திராவிடர் கழக மாநாட்டு நடவடிக்கையும், இதுவரை நடைபெற்றுள்ள மாணவர் பிரச்சாரக் கூட்ட நிகழ்ச்சிகளும் அடுத்தவாரம் வரும். (ஆ-ர்)

### பிறப்பு

தூத்துக்குடி பன்னீர்செல்வம் இளைஞர் கழகத் தோழர் அ. சி. சண்முகம் அவர்களின் மனைவி செல்லம்மாளுக்கு 16-4-46ல் ஓர் ஆண் குழந்தை பிறந்து அன்பழகன் எனப் பெயர் சூட்டப்பட்டது. குடி அரசு வளர்ச்சிக்கு ரூ. 1. அளிக்கப்பட்டது.

o o

நெல்லை மாவட்டம் ராசவல்லியாபுரம் தோழர் ஆர். பி. நாகிவேல் அவர்களின் வாழ்க்கைத்துணைவி சிவனம்மையாருக்கு 27-4-46ல் பெண் குழந்தை பிறந்து தமிழ்மணி எனப்பெயர் சூட்டப்பட்டது. குடி அரசுக்கு ரூ. 1. அளிக்கப்பட்டது.

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

4-5-46ந் தேதி வரை அங்கத்தினர்கள் 43,131

இம்மாதம் 4 உ வரை திராவிடர் கழகத்திற்கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் சேர்க்கப்பட்டு தலைமை நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. சேலம் | 7195 | 7. சென்னை இவ்வாண்டில் 988 | 2858 |
| 2. தஞ்சை | 7113 | 8. இராமநாதபுரம் | 2633 |
| 3. கோவை | 6190 | 9. தென் ஆற்காடு | 2235 |
| 4. திருச்சி | 5039 | 10. மதுரை | 1809 |
| 5. திருநெல்வேலி | 3423 | 11. செங்கல்பட்டு | 950 |
| 6. வடஆற்காடு | 3022 | 12. மற்ற இடங்களில் | 664 |

செயலாளர், மத்திய திராவிடர் கழகம், ஈரோடு

# கழகம் அமைத்தார்கள்

14-4-46ல் திட்டக்குடி திராவிட இளைஞர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு கு. கருப்பையா தலைவராகவும், ச. இராமலிங்கம் செயலாளராகவும், ஆர். பூலோகம் பொருளாளராகவும் மற்றும் 10 உறுப்பினர்களும் கொண்ட செயற்குழு நிறுவப்பட்டது. மே மாத முடிவில் ஆண்டுவிழா நடத்த முடிவு செய்யப்பட்டது.

0 0

7-4-46ல் மாலை 5 மணிக்கு மாயவரம் டவுன் பதுத்தெருவில் கோவிந்தராசன் அவர்கள் தலைமையில் திராவிடர் கழக கிளை ஒன்று திறந்துவைக்கப்பட்டது.

0 0

14-4-46ல் பட்டுக்கோட்டைக்கடுத்த அலைணக்காடு கிராமத்தில் திராவிடர் கழகம் நிறுவப்பட்டு, தோழர் டி. வி. டேவீஸ் தலைவராகவும், எஸ். அருணாசலம் செயலாளராகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

15-4-46ல் ஆக்கோணம் திராவிடர் கழகத்திற்கு தோழர் எம். ஆர். நடேசன் தலைவராகவும், பார்த்தசாரதி செயலாளராகவும், எச். கே. லட்சுமணசாமி கருவூலத்தாராகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

0 0

12-4-46ல் திருத்தங்கல் கிராமத்தில் இளைஞர் முன்னேற்ற கழகம் ஆரம்பிக்கப்பட்டு தோழர் ச. சிதம்பரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் அருணாசலம் தலைவராகவும், சண்முகமூர்த்தி செயலாளராகவும் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

பேராவூரணி திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர் கே. அடைக்கலம் தலைவராகவும், ஏ. வேலு செயலாளராகவும் கொண்ட செயற்குழு தோழர் எஸ். வி. லிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டது.

0 0

17-4-46ல் ஹரூரில் தோழர் எம். பாசுராம் அவர்கள் இல்லத்தில் ஹரூர் தாலுக்கா திராவிடர் கழகக் கூட்டம் நடைபெற்று கல்லாவி தோழர் வேளா அவர்கள் தலைவராகவும், மணியம் ஆர். இராசமாணிக்கம் செயலாளராகவும், சி. வேணுகோபால் செயலாளராகவும் மற்றும் 15பேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

0 0

12-4-46ல் கூத்தாநல்லூரை யடுத்த லட்சுமாங்குடியில் திராவிடர் கழகம் அமைக்கப்பட்டு செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

0 0

13-4-46ல் திருவண்ணாமலை திராவிடர் கழக அமைப்புக்கூட்டம் நடைபெற்று தோழர்கள் சே. முத்துக்குமாரசாமி தலைவராகவும், ஜி. நாகமுத்து செயலாளராகவும் மற்றும் ஏழுபேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

0 0

17-4-46ல் உத்தமர் சீலி திராவிடர் கழகத்திற்கு தோழர்கள் பி. கூத்தசாமி தலைவராகவும், ஜி. ராமச்சந்திரன் செயலாளராகவும் மற்றும் 7-பேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது. அன்றிரவு 8-மணிக்கு தோழர் ஜி. சிதம்பரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் பாண்டியன், நல்லதம்பி, முத்துக்குமாரசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

15-4-46ல் திருச்சி தென்னூர் பழனிசாமி வாசகசாலையில் தோழர் கே. வரதராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திராவிடர் கழகம் அமைக்கப்பட்டது. தோழர் எஸ். தீனதயாளு தலைவராகவும், இராசகோபாலன் செயலாளராகவும் மற்றும் 12பேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

பட்டுக்கோட்டை திராவிடர் கழகத்திற்கு தோழர் சி. நா. விஸ்வநாதன் தலைவராகவும், கே. மாணிக்கம் செயலாளராகவும் மற்றும் 17பேர் உறுப்பினராகவும் கொண்ட செயற்குழு 1946ம் ஆண்டிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டது.

0 0

15-4-46ல் திருச்சி வரகனேரி பிள்ளையார் கோயில் தெருவில் திராவிட வாலிபர் கழகம் அமைக்கப்பட்டு தோழர்கள் பி. எஸ். ஆரோக்கியசாமி தலைவராகவும், சி. இரத்தினம் செயலாளராகவும் மற்றும் 7பேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

நாகபேத் திராவிடர் கழகத்திற்கு ஜே. டி. மோசஸ் எல். எம். பி. தலைவராகவும், பி. எஸ். சே. சயபால் செயலாளராகவும் மற்றும் 7பேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு 1946ம் ஆண்டிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டது.

0 0

துறையூர் திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர்கள் எம். கே. கிருஷ்ணசாமி தலைவராகவும், டா. மா. பெரியசாமி செயலாளராகவும் மற்றும் 9பேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

0 0

14-4-46ல் கல்லக்குறிச்சி தாலுக்கா வளையாம்பட்டு கிராமத்தில் தோழர் பு. பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழகக்கூட்டத்தில் அ. நல்லசாமி, ம. அ. சாமி, வேலாயுதம் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். 1946ம் ஆண்டிற்கு தோழர் ந. இராமானுசம் தலைவராகவும், ச. சண்முகம் செயலாளராகவும் மற்றும் மூவர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

17-4-46ல் முத்துப்பேட்டை திராவிடர் கழக அங்கத்தினர்கள் கூட்டம் நடைபெற்று 1946ம் ஆண்டிற்கு லெ. க. அ. இராமச்சந்திரன் தலைவராகவும், ஆர். சாமிநாதன் செயலாளராகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

0

திருத்துறைப்பூண்டி தாலுக்கா கரியாப்பட்டணம் திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர் எஸ். ஜி. செல்லப்பா தலைவராகவும், பி. எ. சண்முகம் செயலாளராகவும் கொண்ட திராவிடர் கழகம் அமைக்கப்பட்டது.

திருச்சி வரகனேரி அந்தோனியார் தெரு திராவிட இளைஞர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர்கள் எஸ். ஆரோக்கியசாமி தலைவராகவும், ஜி. பி. இருதயசாமி செயலாளராகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது.

17-4-46ல் காஞ்சி பிள்ளையார் பாளையம் அக்கசாப்பாளையத் தெரு திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர்கள் பொ. சீபாலம் தலைவராகவும், அ. ஐயம்பெருமாள் செயலாளராகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

0 0

22-4-46ல் விழுப்புரம் கீழ்ப்பெரும்பாக்கம் திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர் மு. சண்முகம் தலைவராகவும், ா. சிவக்கொழுந்து செயலாளராகவும் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

0 0

சாத்தூர்க்குடி மேலச்சண்முகபுரம் திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு ச. திரவியம் தலைவராகவும், ஆ. பொன்னுசாமி செயலாளராகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது.

Edited, Printed, and Published by H. Krishnaswamy at the Tamilian Press 42, [illegible] street, ERODE.